# பனித்துளி செய்திகள்!

"அவர் சொல்ல ஆகும்! அவர் கட்டளையிட நிற்கும்!!" (சங்கீதம் 33:9)

துளி செய்திகள் உங்கள் வாழ்வை சாரம் ஏற்றும்..... சுவாலிடும்!

(திங்கள்தோறும்)

09.06.2025

## 23. உங்களைப் 'பொன்னாக மாற்றும்' கர்த்தர்!

**சு**ற்றி நின்ற நண்பர்கள்கூட "உன் கஷ்ட சூழ்நிலையை பார், தேவன் உன்னை கைவிட்டார்! உன் தேவன் எங்கே?" என யோபுவிடம் கரிசனையில்லாமல் கூறியதைக் கேட்டு, *யோபு* சற்றே தடுமாறினார்! கொஞ்சம் மௌனத்திற்குப் பிறகு, மனம் தெளிந்த *யோபு,* உறுதியான குரலில் "சிநேகிதன் *எலிப்பாஸ்,* கேள்! இந்த கொடிய சூழ்நிலையில் 'நான் அவரைப் பார்க்கா விட்டாலும்' என் இடப்பக்கத்தில் தேவன் கிரியை செய்வதையும், என் வலப்பக்கத்தில் கிரியை செய்வதையும் திட்டமாய் உணர்கிறேன்! அவரது கிரியை முடிந்ததும் "என் தேவனின் கையில் பொன்னாய் ஜொலிப்பேன்" (யோபு 23:8-10) என கூறியதும், சற்று வெட்கத்துடன் *எலிப்பாஸ்* தூர நின்றான்! உங்களைப் 'பொன்னாக' மாற்றும் கர்த்தர்!

'அக்கினியும்' எனது நன்மைக்கே என அறிவது ஜெய ஜீவியம்!

- ரத்னம்